செய்யக்கூடியவர் விலையை நிர்ணயம் செய்ய முடிவதில்லை. அவர்கள் நிலத்திற்கு ஒரு மதிப்பு போட்டு, அல்லது அவர்கள் உழைப்பிற்கு ஒரு செலவு போட்டு, அல்லது அவர்களால் செலவழிக்கப்படும் தொகைக்கு வட்டி போட்டு உற்பத்தியாகும் விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் அவர்களே செய்யாமல் அதை வாங்க வருகிற வியாபாரி அந்த விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்கிறார். ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களே விவசாய விளை பொருள்களின் விலையை நிர்ணயம் செய்யக்கூடிய நிலை ஏற்பட வேண்டும். அல்லது அரசாங்கமே அந்த விவசாய விளைபொருள் களுக்கு விலை நிர்ணயம் செய்யக்கூடிய அளவிற்கு ஒரு பட்டியல் தயார் செய்து, இந்த இந்த உற்பத்திக்கு இவ்வளவு இவ்வளவு செலவாகியுள்ளது, ஆகவே அவை இவைகளின் விலைகள் இவ்வளவு என்று விலை நிர்ணயம் செய்யக்கூடிய அளவிற்கு தெள்ளத்தெளிவான விளக்கத்தை அரசாங்கம் தரவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

(8) அமைச்சரின் அறிக்கை

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் குறித்து விசாரிக்க உயர்நீதி மன்ற நீதிபதி நியமனம்பற்றிய அவை முன்னவரின் அறிக்கை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): சட்டப் பேரவை 82-வது விதியின்கீழ் அவை முன்னவர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசு ஆணை ஒன்றினை இந்த அவைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன். 23—7—1971 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சில அசம்பாவித நிகழ்ச்சிகள் குறித்து விசாரிப்பதற்காக உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரை நியமித்துள்ளது என்ற செய்தியை அறிவிக் கிறேன்.

(7) 1971–72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி. பிற்பகல்

* திரு. சி. க. வடிவேலு: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, தமிழக அரசு 1967-க்குப் பிறகு உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் மிகுந்த அக்கறையோடு நல்ல முறையில் செயல்பட்டு வருவதை நாம் பார்க்கிறோம். பொதுவாக 1967-க்கு முன் தமிழ கத்தில் உணவுத் தட்டுப்பாடு எந்தளவிற்கு சீர்கெட்டு இருந்தது என்றும் 1967-க்குப் பிறகு எந்தளவிற்கு உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம் என்பதையும் பார்க்கும்போது தமிழக அரசு நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறது என்பதைப் போலவே அரசாங்க ஊழியர்களும் அந்தளவிற்கு உற்சாகத்தோடு இருந்திருக் கிறார்கள் என்பதையும் பாராட்டுகிறேன். தமிழக அரசு மூன்று கோட்டங்களை விவசாய உற்பத்திக் கோட்டங்கள் என்று தேர்ந் தெடுத்திருக்கிறது. முசிறி, பட்டுக்கோட்டை, கடலூர் இவை உணவு உற்பத்தியை அதிக அளவில் செய்யக்கூடிய கோட்டங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்காக அரசைப் பாராட்டுகிறேன்.